# இளைஞர் நலன் மற்றும்
# விளையாட்டு மேம்பாட்டுத் துறை



## அறிவிப்புகள் 2022 - 2023

**சிவ.வீ.மெய்யநாதன்**

சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத்துறை மற்றும்
இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்

# இளைஞர் நலன் மற்றும்
# விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## மானியக் கோரிக்கை எண். 49

## அறிவிப்புகள்
## 2022–2023

**சிவ.வீ. மெய்யநாதன்**

**சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத்துறை மற்றும்**
**இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்**

## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் 21 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**சிவ.வீ. மெய்யநாதன்**
சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத்துறை மற்றும்
இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்

1. தமிழ்நாட்டில் 10 இடங்களில் ரூ.3000 இலட்சம் மதிப்பீட்டில் சிறு விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்படும்.

   பொது மக்களுக்கு விளையாட்டில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வண்ணம் அரசின் பங்களிப்பாக ரூ.250 இலட்சமும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் பங்களிப்பாக ரூ.50.00 இலட்சமும் சேர்த்து ஒரு சிறு விளையாட்டு அரங்கத்திற்கு மொத்தம் ரூ.300 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் 10 சிறு விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்படும். இதன் மூலமாக, தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களுக்கு விளையாடுவதற்கும் மற்றும் மழை காலங்களில் மறுவாழ்வு மையமாக அமைவதற்கும், பள்ளி விழாக்கள் நடத்துவதற்கும் உதவியாக அமையும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்கில் ரூ.770.00 இலட்சம் செலவில் செயற்கை இழை தடகள ஓடு பாதை அமைக்கப்படும்.

புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் இப்பொழுது காணப்படும் செம்மண் ஓடு தளத்திலேயே அற்புதமான விளையாட்டு சாதனைகளை நம் வீரர்கள் படைத்து வருவது நாடறியும். அவர்களுடைய ஆற்றலை பல மடங்கு உயர்த்தும் வண்ணம், செயற்கை இழை தடகள ஓடுபாதை அமைத்தால், அது உலக அரங்கிலே நமது வீரர்கள் மேலும் சாதனைகள் படைப்பதற்கும், மிகுந்த ஆற்றல் வாய்ந்தவர்களாகவும், இன்னும் தகுதி வாய்ந்தவர்களாகவும் மாறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்த ரூபாய் 770.00 இலட்சத்தில் செயற்கை இழை தடகள ஓடு பாதை அமைக்கப்படும்.



3. திருவாரூர் மாவட்ட விளையாட்டரங்கில் ரூ.770.00 இலட்சம் செலவில் செயற்கை இழை தடகள ஓடு பாதை அமைக்கப்படும்.

திருவாரூர் மாவட்டம் மிகச் சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கி உள்ளது என்பது நாம் நன்கு அறிந்ததே. அங்கு ஒரு செயற்கை இழை தடகள ஓடுபாதை அமைத்தால், இன்னும் அந்த இளைஞர்களுடைய ஆற்றல் மேம்படும். அங்கு இருக்கின்ற விளையாட்டு வீரர்கள் செயற்கை இழை தளத்தில் ஓடுவதற்கு தயாராகத் தங்களை மாற்றி அமைத்துக் கொள்வதற்கான ஆற்றலை உயர்த்தும் வகையிலே, ரூபாய் 770.00 இலட்சத்தில் செயற்கை இழை தடகள ஓடுபாதை அமைக்கப்படும்

4. கடலூர் அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கத்தில் ரூ.550.55 இலட்சம் செலவில் சர்வதேச தரத்திலான பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் அமைக்கப்படும்.

வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா அவர்களின் புகழ்பாடும் கடலூர் அண்ணா விளையாட்டு அரங்கத்தில் ரூபாய் 550.55 இலட்சத்தில் சர்வதேச தரத்திலான பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும்.



5. தமிழ்நாட்டிலுள்ள விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளுக்கு சர்வதேச பயிற்சியாளர்களைக் கொண்டு ரூ.500.00 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்றார் ஔவை. அவ்வாறு உலகத் தரம் வாய்ந்த பல்வேறு விளையாட்டு வீரர்களை உருவாக்கியுள்ள பயிற்சி யாளர்களை சந்திக்கும் பொழுது நம் உள்ளூர் விளையாட்டு வீரர்களுக்கு உலகின் சூழ்நிலையும், பக்குவமும் கைவர இயலும். அத்தகைய ஒரு உயரிய நோக்கத்தோடு தமிழ்நாட்டிலுள்ள விளையாட்டு வீரர் /வீராங்கனைகளுக்கு சர்வதேச பயிற்சியாளர்களைக் கொண்டு மிகச் சிறந்த பயிற்சியினை அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். இதற்காக ரூபாய் 500 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

6. மாநில விளையாட்டுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியினை ரூ.331.00 இலட்சத்திலிருந்து ரூ.400.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

மாநில விளையாட்டுச் சங்கங்களுக்கு, விளையாட்டு வீரர்கள் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற பயணப்படி வழங்கிடவும் மற்றும் அந்த சங்கங்கள் நமது தமிழ்நாட்டிலேயே தேசிய விளையாட்டுப் போட்டிகள் நடத்திடவும் உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, புதிதாக சில சங்கங்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்ட நிலையிலே, அவர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற நிதியுதவி ரூபாய் 331.00 இலட்சத்திலிருந்து ரூபாய் 400.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.



7. சென்னையில் இளைஞர்களின் குத்துச்சண்டை ஆர்வத்தினை ஊக்குவிக்க ரூ.200.00 இலட்சம் செலவில் மற்றுமொரு குத்துச் சண்டை அகாடமி (Boxing Academy) அமைக்கப்படும்.

சென்னை நகரமானது பாரம்பரியமாகவே குத்துச்சண்டை விளையாட்டிற்கு புகழ்பெற்றது. சென்னையில் பல்வேறு குத்துச்சண்டை வீரர்கள் உருவாகி குத்துச்சண்டை விளையாட்டில் புகழ்பெற்று விளங்கினர். தமிழ்நாட்டில் குத்துச்சண்டை விளையாட்டை மீண்டும் புகழ்பெறச் செய்ய, பல்வேறு உலகப்புகழ் பெற்ற குத்துச்சண்டை வீரர்களை உருவாக்குவது அவசியமானதாகும். எனவே, தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் குத்துச்சண்டை விளையாட்டிற்கு புத்துயிர் அளிக்க சென்னையில் மற்றுமொரு குத்துச் சண்டை அகாடமி (Boxing Academy) ரூபாய் 200.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

8. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் நடத்தப்பட்டு வரும் அனைத்து விளையாட்டு விடுதிகளிலும் ஒரே வகையிலான விளையாட்டுச் சீருடைகள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சேவைக் கட்டணம் வழங்கப்படும்.

சீருடையும், விளையாட்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது. அதனை மிகச் சிறப்பாக நடத்தும் வண்ணம், அனைத்து விளையாட்டு விடுதிகளிலும் ஒரே மாதிரியான சீருடைகள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சேவைக் கட்டணங்கள் வழங்குவது, அனைத்து மாணவர்களின் மனதிலும் நல்லதொரு நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் ஊட்டுகின்ற செயலாகும். இதற்காக கூடுதல் நிதியுதவியாக ரூபாய் 176.60 இலட்சம் ஒதுக்கீடு செய்து அனைத்து மாணவச் செல்வங்களுக்கும் சிறந்த சீருடைகள் வழங்கப்படும்.



9. வேலூர் காட்பாடியில் ரூ.69.00 இலட்சம் செலவில் கல்லூரி மாணவியருக்கான சிறப்பு நிலை விளையாட்டு விடுதி அமைக்கப்படும்.

வேலூர் காட்பாடியில், மற்றொரு அறிவிப்பிற்கிணங்க, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய பெயர் சூட்டப்பட உள்ள புதிய விளையாட்டு அரங்கத்தில் இருக்கின்ற கட்டடங்களைப் பயன்படுத்தி, கல்லூரி மாணவியருக்கான சிறப்பு நிலை விளையாட்டு விடுதி அமைக்கப்படும். இதற்காக ரூபாய் 69.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

10. விளையாட்டு வீரர்கள் நல நிதிக்கான நிதிய மூலதனத்தை ரூ.20.00 இலட்சத்திலிருந்து ரூ.50.00 இலட்சமாக உயர்த்தப்படும்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் பதிவு செய்யப் பட்டுள்ள வீரர்/வீராங்கனைகளுக்கு எதிர்பாராமல் நேர்கின்ற காயங்கள் மற்றும் உயிரிழப்பு, இதற்கான நல நிதி ஒரு மூலதன நிதியத்தைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனுடைய அளவை ரூபாய் 20.00 இலட்சத்திலிருந்து அதிக விளையாட்டு வீரர்கள் பயனடையும் வகையில் ரூ.50.00 இலட்சமாக உயர்த்தப்படும்.



11. இராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கரையோரத்தில் வாழும் மக்களிடையே சிறப்பு உலகத் திறனாளர்கள் கண்டறியும் போட்டிகள் நடத்தப்பட்டு அம்மாணாக் கர்களுக்கு விடுதி களில் இடங்கள் ஒதுக்கீடு செய்தல் மற்றும் பரமக்குடியில் ரூ.50.00 இலட்சம் செலவில் பளுதூக்குதல் பயிற்சி அளிக்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கரை யோர மக்களிடையே உடல்திறன் வளரும் வண்ணம் சிறப்பு உலகத் திறனாளர்கள் கண்டறியும் போட்டிகள் நடத்தப்பட்டு சாதனை படைக்கும் மாணவ, மாணவியர் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு விடுதிகளில் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், பரமக்குடியில் பளுதூக்குதல் பயிற்சி அளிக்க வசதிகள் ஏற்படுத்தப்படும். இப்பணிகளுக்காக, ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

12. அறிஞர் அண்ணா மிதிவண்டிப் போட்டியினை நடத்துவதற்கு ஒதுக்கப்பட்ட தொகையினை ரூ.1.00 இலட்சத்திலிருந்து ரூ. 38.00 இலட்சமாக உயர்த்தி புதுப்பொலிவுடன் நடத்தப்படும்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் அண்ணா மிதிவண்டி போட்டிகளை புதுப் பொலிவுடன் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நடத்துவதற்கு தற்போது ஒதுக்கப்பட்ட நிதியினை ரூபாய் 1.00 இலட்சத்திலிருந்து ரூபாய் 38.00 இலட்சமாக உயர்த்தி இப்போட்டிகள் நடத்தப்படும்.



13. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மலைவாழ் மாணவ, மாணவியர்களின் விளையாட்டு மற்றும் திறனை மேம்படுத்த தினசரி பயிற்சி திட்டம் (DAY BOARDER SCHEME) (ரூ. 25.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.)

கிருஷ்ணகிரி மாவட்டம் தளி, தேன்கனிக்கோட்டை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள மலைவாழ் மாணவ, மாணவியர்களிடையே விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் "தினசரி பயிற்சி திட்டம்" (Day Boarder Scheme) மற்றும் "உலகத் திறனாளர்கள் கண்டறிவதற்கான அடுக்குச் சோதனை" (World Beaters Talent Spotting – Battery of Tests) ஆகியவை ரூபாய் 25.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்

14. தருமபுரி மாவட்டம், சித்தேரி பகுதியில் உள்ள மலைவாழ் மக்களிடையே சிறப்பு உலகத் திறனாளர்கள் கண்டறியும் போட்டிகள் ரூ.25.00 இலட்சம் செலவில் நடத்தப்படும்.

தருமபுரி மாவட்டம், சித்தேரி பகுதியில் மலைவாழ் இன மக்களிடையே உடற்தகுதி விழிப் புணர்வை ஊக்கு விக்கும் வகையில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி விளையாட்டு மைதானமும் அமைக்கப்படும். விளையாட்டு விழிப்புணர்வு மற்றும் வளர்ச்சி சிறப்பு உலகத் திறனாளர்கள் கண்டறியும் போட்டிகள் நடத்துதல். அதில், சாதனை படைக்கும் மாணவ, மாணவியர் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு விடுதிகளில் இடங்கள் ஒதுக்கீடு செய்து வாய்ப்பு அளிக்கும் பொருட்டு ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



15. விருதுநகர் மாவட்டத்தில் விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.25.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளுதல் மற்றும் சிறப்பு உலகத் திறனாளர்கள் கண்டறியும் போட்டிகள் நடத்தப்பட்டு அம்மாணாக்கர்களுக்கு விடுதிகளில் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

விருதுநகர் மாவட்டத்தில் உள் விளையாட்டரங்கம் தடகள ஓடுபாதை, உடற்பயிற்சிக்கூடம், ஸ்குவாஷ், நீச்சல் குளம் ஆகிய விளையாட்டு வசதிகளில் சீரமைப்புப் பணிகள் செய்யப்படும். விளையாட்டு விழிப்புணர்வு மற்றும் வளர்ச்சி சிறப்பு உலகத் திறனாளர்கள் கண்டறியும் போட்டிகள் நடத்தப்பட்டு சாதனை படைக்கும் மாணவ, மாணவியர் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு விடுதிகளில் இடங்கள் ஒதுக்கீடு செய்து வாய்ப்பு அளிக்கப்படும். இதற்காக, ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

16. புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் வேலூர் மாவட்டங்களில் உள்ள விளையாட்டு அரங்கங்களுக்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் பெயர் சூட்டப்படும்.

தமிழ்நாட்டு இளைஞர்களின் தன்னம்பிக்கை ஒளியாகத் திகழும் மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பெயர் புதுக்கோட்டை, வேலூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள விளையாட்டு அரங்கங்களுக்கு சூட்டப்படும்.



17. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் திறனை மேம்படுத்தி மின்னணு ஆளுமை முறைகள் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நலத்திட்டங்களின் செயல்பாடுகள், விளையாட்டு விடுதிகளின் செயல்பாடுகள் மற்றும் பிற பணிகள் தொடர்பான செயல்பாடுகளின் விரிவான ஆய்வினை திறன் வாய்ந்த நடுநிலையான முகமைகளின் மூலம் மேற்கொள்ளப்படும். அதன்மூலமாக, இதுவரையில் ஒவ்வொரு விளையாட்டிலும் எந்த மாதிரியான சாதனைகள்புரிவதற்கு இவ்வாணையத்தின் செயல்பாடுகள் உதவியிருக்கின்றன என்பதனையும், எதிர்காலத்தில் அதை எவ்வாறு சிறப்பாக அமைக்க முடியும் என்பதனையும், ஒரு முழுமையான ஆய்விற்கு (Comprehensive Analysis) உட்படுத்தி இவ்வாணையத்தின் வடிவத்திற்கும், செயலாக்கத்திற்கும்

ஒரு புத்துணர்வு ஊட்டி, அதன் குறைகள் கண்டறியப்பட்டால் அவற்றை அகற்றி களைவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், ஒவ்வொரு விளையட்டு வீரர் வீராங்கனையும் வெளிப்படையாக பதிவேற்றம் செய்யவும், இவ்வாணையத்தின் விளையாட்டரங்கங்கள், மைதானங்கள், நீச்சல் குளங்கள் ஆகியவற்றின் பயன்பாடுகளில் வெளிப்படைத்தன்மை, நடுநிலைத்தன்மை, நிதி நேர்மை (Financial diligence) ஆகியவற்றை கொண்டு வரும் வண்ணம் மின்னணு ஆளுமை e-Governance முறைகள் கொண்டு வரப்படும்.



18. நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர்களுக்கு தற்போது வழங்கி வரும் ஓய்வூதியம் ரூ.3000 த்திலிருந்து ரூ.6000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

விளையாட்டு வீரர்கள் அவர்களுடைய இளமைக் காலத்தில் வெற்றிகளை குவிக்கும் நேரத்தில் நல்லோர்களாகவும் வல்லோர்களாகவும் இருந்து அவர்கள் மீது ஒளி வெள்ளம் பாய்கின்ற அவர்களுடைய வலிமையும் ஆற்றலும் பொருந்திய காலம் நிறைவு பெற்ற பிறகு அவர்களின் சாதனைகளை அங்கீகரித்து அவர்களது வாழ்வாதாரம் தழைக்கும் பொருட்டு வழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியம் ரூ.3,000/- லிருந்து ரூ.6,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

19. தேசிய மாணவர் படை மாணவர் களுக்கு தற்போது இருக்கும் 1 மணி நேர சிற்றுண்டி படித்தொகையை ரூ.10-ல் இருந்து ரூ.25-ஆக உயர்த்தப்படும்.

தேசிய மாணவர்படையில் செயல் வீரர்களாக களம் இறங்குகின்ற மாணவ மாணவியருக்கு தற்போது. சிற்றுண்டி வழங்கப்பட்டு வருகிறது. ஆகச் சிறந்த உடற்பயிற்சியினை நாள் முழுவதும் செய்து களைப்படைகின்ற அந்த மாணவ மாணவியருக்கு புத்துணர்வு ஊட்டும் வகையில் நல்ல முறையில் சிற்றுண்டி வழங்குவதற்காக அந்த படித் தொகையை ரூ.10/-லிருந்து ரூ.25/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.



20. தேசிய / சர்வதேச துப்பாக்கி சுடுதல் போட்டிகளில் பங்கேற்கும் வகையில் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க 50 மீ தடுப்பு துப்பாக்கி சூடு வரம்பு கட்டுமானம் தமிழ்நாடு உடற் கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.110.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

தேசிய / சர்வதேச துப்பாக்கி சுடுதல் போட்டிகளில் பங்கேற்கும் வகையில் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க 50 மீட்டர் தடுப்பு துப்பாக்கி சூடு வரம்பு கட்டுமானம் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்தில் ரூபாய் 110.00 இலட்சத்தில் அமைக்கப்படும்

21. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் புதிதாக துவங்கப்பட்ட 3 இளங்கலை பாடத்திட்டத்திற்கு கூடுதல் வகுப்பறை களுக்கான கட்டடங்கள் கட்டப்படும்.

எதிர்காலத்தில் நல்ல திறமைபெற்ற உடற்கல்வியாளர்களை உருவாக்குகின்ற வகையிலும் இடப்பற்றாக்குறையை போக்கும் விதமாக கல்வி கற்கும் மாணாக்கர்களுக்கு தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில்புதிதாக துவங்கப்பட்ட மூன்று இளங்கலை பாடத்திட்டத்திற்கு தேவையான கூடுதல் வகுப்பறைகள் ரூபாய் 583.50 இலட்சம் செலவில் கட்டப்படும்.

**சிவ.வீ. மெய்யநாதன்**

சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத்துறை மற்றும்
இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்



இளைஞர்களை ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபடுத்திடவும், சிறகடிக்கும் அவர்கள் ஆற்றலை திரட்டிடவும் அவர்களை மனஉறுதி படைத்தவர்களாகவும், எதிர்கால வாழ்வை நம்பிக்கையோடு எதிர்கொள்பவர்களாகவும் உருவாக்கும் பெரும் பொறுப்பு உள்ளது.

**– முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்**